செய்தி வெளியீடு எண்: 526 நாள்: 11.11.2016

## செய்தி வெளியீடு

அருங்காட்சியகங்கள் துறையின் சார்பாக, சென்னை அருங்காட்சியகத்தில் ஒவ்வொரு ஆண்டும் குழந்தைகள் தினமான நவம்பர் மாதம் 14–ஆம் நாள் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டு வருகிறது. படிக்கும் வகுப்பு வாரியாக பள்ளி மாணவ–மாணவியர்களுக்கு ஓவியப் போட்டி, பேச்சுப் போட்டி நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும், சான்றுகளும் வழங்கப்படவிருக்கிறது. வரும் 14.11.2016 (திங்கள் கிழமை) அன்று "குழந்தைகள் தின விழா" அரசு அருங்காட்சியகத்தில் கீழ்க்கண்டவாறு கொண்டாடப்பட உள்ளது.

| | |
|---|---|
| காலை 10.00 மணி | அருங்காட்சியக நூற்றாண்டு கண்காட்சிக் கூடத்தில் ஓவியங்களின் சிறப்புக் கண்காட்சி தொடக்க விழா |
| பகல் 10.15 மணி | அருங்காட்சியக கலையரங்கில் பரிசளிப்பு விழா |

இவ்விழாவில் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் பள்ளி மாணவ–மாணவியர்கள் வரைந்த ஓவியங்களின் சிறப்பு கண்காட்சி துவக்கி வைத்து விழாப் பேருரையாற்றுகிறார். சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, அரசு முதன்மைச் செயலாளர் திரு.தா.கி.இராமச்சந்திரன்,இ.ஆ.ப., தலைமையுரையாற்றுவார் அருங்காட்சியகங்களின் இயக்குநர் முனைவர் டி.ஜகந்தாதன்,இ.ஆ.ப.,. சிறப்புரையாற்றுவார்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**